**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

**O.S. No.**30/2020

2025 ம் ஆண்டு ஜனவரி மாதம் 08 -ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.2 வாக்குமூலம் 1969 ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி திருமதி. A. சீதாலெட்சுமி, M.A.,B.L. மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் கூறப்பட்டு உறுதி கூறப்படுகிறது.

**நாள் : 08.01.2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கோவிந்தராஜன் | ஜாதி | : | |
| த/பெயர் | : | மருதையன் | மதம் | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |
| வட்டம் | : | | வயது | : | |

வா.சா. 2 முன்னிலை பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

இந்த வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை. என்னை நீதிமன்றத்திற்கு வாதியின் கணவர் குமார் தான் அழைத்து வந்தார் என்றால் சரிதான். பாலையூர் கிராமத்தில் தாவா சொத்து மேலத்தெருவில் உள்ளது. நான் புதுப்பாலத்தில் தாவா சொத்திலிருந்து 1 கி.மீ. தூரத்தில் உள்ளேன். நான் தாவா சொத்து அமைந்து மேலத்தெருவிற்கு சென்று ஒரு வருடம் ஆகிறது.

2) தாவா சொத்தில் அமைந்துள்ள மனைக்கட்டில் தற்போது யார் குடியிருந்து வருகிறார்கள் என்பது குறித்து எனக்கு தெரியாது என்றால் சரிதான். தாவா சொத்து குறித்து ஏற்கனவே வாதியின் கணவர் குமாருக்கும், அவரது அண்ணனுக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டு ஊரில் பஞ்சாயத்து பேசி தாவா சொத்தை ராஜமாணிக்கம் தான் அனுபவித்து வரவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டதென்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது.

3) ன் கணவர் குமார் வேறு ஒரு நபரிடன் கடன் வாங்கி சென்றது தொடர்பாக பிரச்சனை ஏற்பட்டு, அந்த பஞ்சாயத்தில் வாதியின் கணவர் குமார் கொடுக்க வேண்டிய தொகையை அந்த குடும்பத்தின் பொறுப்பாளர் என்ற

முறையில் ராஜமாணிக்கம் கொடுத்து தீர்க்க வேண்டும் என்று முடிவு எடுக்கப்பட்டதென்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. 19.11.2007-ல் கொடுக்கல் வாங்கல் தொடர்பாக குமாருக்கும் கோவிந்தராஜ் என்பவருக்கும் இடையில் ஏற்பட்ட பிரச்சனை தொடர்பாக பஞ்சாயத்து பேசியபோது நான் இருந்தேனா என்றால் இல்லை.

4) அந்த பஞ்சாயத்தில் கலந்துக்கொண்டு அதில் நான் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். தாவா சொத்து 2ம் பிரதிவாதி ராஜமாணிக்கத்தின் பராமரிப்பிலும், அனுபவத்திலும் இருந்து வந்து தற்போது அந்த மனைக்கட்டில் 1ம் பிரதிவாதி முத்துகிருஷ்ணன் குடியிருந்து வருகிறார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க தாவா சொத்து அவருடைய அனுபவத்திலுள்ளதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கும் ராஜமாணிக்கத்திற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்று வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

5) வாதியின் கணவர் குமார் தற்போது தெற்கிலுள்ள வீட்டில் குடியிருந்து வருகிறார். அவருடைய வீட்டிற்கு நான் சென்றது கிடையாது. குமார் தாவா கிராமத்தில் வழக்கு தேதிக்கு முன்போ அல்லது அதற்கு பின்போ எந்த காலத்திலும் தாவா இடத்தில் குடியிருக்கவில்லை என்றால் சரியல்ல. பூவம்மாள் என்பவர் நாணலூரை சேர்ந்தவர் ஆவார். தாவா வழக்கு சொத்தை பொறுத்து பெயரளவில் மோசடியாக ஏற்பட்ட கிரைய சாசன பத்திரத்திற்கு ஆதரவாகவும், வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

A SEETHALAKSHMI

Digitally signed by A SEETHALAKSHMI
DN: cn=A SEETHALAKSHMI, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2025.02.03 14:10:42 +0530

District Munsif
Mannargudi.